
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1112

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

102

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

## தீண்டாமையை ஒழிக்க, வழிகாட்டிய கோபி மாநாடு!

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் 21.06.1936 அன்று சமூக சீர்திருத்த மாநாடு நடைபெற்றது. சௌந்தர பாண்டியனார், வி.வி.இராமசாமி, பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி, மாநாட்டின் தலைவர் கே.எம். பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் முதல் நாள் இரவே ஈரோடு வந்துவிட்டனர். மறு நாள் காலை தந்தை பெரியார், ஈ.வெ.கிருஷ்ணசாமி உள்ளிட்டோருடன் காரில் கோபி புறப்பட்டனர். மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் டி.கந்தசாமி, பெரியார் உட்பட விருந்தினர்களை வரவேற்று உபசரித்தார்.

பின்னர் காலை 9.30 மணிக்கு மாநாட்டு ஊர்வலம் தொடங்கியது. வழிநெடுக, வரவேற்பு வளைவுகளும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. சேலம், ராசிபுரம், கோவை, உடுமலைப்பேட்டை, ஈரோடு உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 5,000 பேர் வருகை தந்து, மாநாட்டுப் பந்தலை நிரப்பியிருந்தனர். மஞ்சுளா பாய், மல்லிகார்ஜுன், சித்தையன், சுப்பண்ணா உள்ளிட்டோர் பாடல்கள் பாடினர். பின்னர், சௌந்தரபாண்டியனார் மாநாட்டைத் திறந்து வைத்து, சீர்திருத்த மாநாடுகளின் தேவையை விவரித்து, சொற்பொழிவாற்றினார். தீண்டாமைக் கொடுமைகள், சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், பெண்களின் நிலை குறித்து, டி.கந்தசாமி வரவேற்புரையாற்றினார்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த வழக்கறிஞர் கே.எம்.பாலசுப்பிரமணியம் பேசுகையில், உயிரினங்களின் தோற்றம் முதல், நாகரிக சமூகத்தை நோக்கிய மானுட வளர்ச்சி வரை அனைத்தையும் விவரித்துவிட்டு, அத்தகைய முற்போக்கான மனிதன் மூடநம்பிக்கைகளைத் தூக்கிச் சுமக்கலாமா என பொதுமக்களின் சிந்தனைகளைக் கிளறும் வண்ணம் அற்புதமாக உரை நிகழ்த்தினார். ‘தீண்டாமை என்பதை செடி என்றால், சாதி அதன் ஆணிவேர், ஆணிவேரை வெட்டாமல் செடியின் கிளையை மட்டும் வெட்டினால், மீண்டும் வளரத்தானே செய்யும்’ என்ற அவர், ‘யூதர்களைப் போன்று இந்நாட்டு பார்ப்பனர்கள் தமது சாதிக்கு உயர்வும் பெருமையும் கற்பித்து, ‘பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்கள் தாம்’ என்று கற்பனை செய்து கதை எழுதிவிட்டு, ‘கடவுளின் ஆணை’ என்று கூறி மக்களைக் கட்டுப்படுத்தி முட்டாள்கள் ஆக்கிவிட்டனர்.

காபி கிளப்புகள் முதல் ரயில்வே ஸ்டேஷன்கள் வரை அனைத்திலும் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதோர் பாகுபாட்டை, முழுமையாக ஒழிக்க வேண்டும். இந்த பாகுபாடு ஒழிந்தால், ‘சமபந்தி போஜனம்’ என்ற சாதியை ஒழிக்கும் ஒரு கோடாரி, வேலை செய்ய ஏதுவாகும். மற்ற கோடாரியானது கலப்புமணம். காதலுக்கு கண் மட்டுமில்லை, சாதியும் இல்லை என்பது இப்போது நிரூபணமாகி வருகிறது. அதுவேதான் இனியும் நமது விதியாக முடியும் என்பதில் ஐயமில்லை” என்றார்.

பகுத்தறிவு இயக்கத்தின் பணிகளைப் பாமர மக்களும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையில், பட்டுக்கோட்டை அழகிரி உரையாற்றினார். மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் மாநாடு கூடியவுடன், மஞ்சுளா பாய், சித்தையன் ஆகியோர் மீண்டும் பாடல்கள் பாடினர். நடேசன், சித்தையன் ஆகியோர் உரையாற்றிய பின்னர், சமூக சீர்திருத்தம் பற்றி பெரியார் சுமார் 1 மணி நேரம் பேசினார். பெரியார் பேசிக்கொண்டிருக்கும்போதே, அமைச்சர் பி.டி.ராஜன் மாநாட்டிற்கு வருகை தந்தார். சர் பிட்டி தியாகராயர், பனகல் அரசர் ஆகியோர் படங்களை அவர் திறந்துவைத்தார். கோபிசெட்டிப்பாளையம் சுற்றுவட்டாரப் பகுதிகளில், அதுவரை கண்டிராத அளவுக்கு வித்தியாசமான அரசியல் மாநாடாக இது அமைந்தது. கோபிச்செட்டிப்பாளையத்தில் இயங்கி வந்த சமூக சீர்திருத்த இயக்கத்தின் ஆதரவில் இம்மாநாடு நடைபெற்றது.

**...கூட்டம் திரளும்**

## பீகாரில் இனித்தது, தமிழ்நாட்டில் கசக்கிறது!

மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் 1.30 கோடி பெண்களுக்கு மூன்று மாதங்களுக்கான தொகையுடன் கோடை கால சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம் சேர்த்து ரூ.5,000 அளித்து இன்ப அதிர்ச்சி அளித்தார், நம் முதலமைச்சர். மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் அடைந்ததைப் பொறுக்காத சிலர், அதை விமர்சனம் செய்கின்றனர். அதற்கு எதிர்வினையாக பத்திரிகையாளர் பரக்கத் அலி, ‘பீகாரில் இனித்தது... தமிழ்நாட்டில் கசக்கிறது’ என முகநூலில் கருத்தினைப் பகிர்ந்துள்ளார்

‘2025 அக்டோபர் 6-ஆம் தேதி பீகார் சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. சரியாக, அதற்கு 10 நாள்கள் முன்பு, அதாவது செப்டம்பர் 26-ஆம் தேதி பீகாரில், பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு வசதியாக 75 லட்சம் பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தை, பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

மகளிர் உரிமைத் தொகை, மூன்று மாத அட்வான்ஸாக 3 ஆயிரமும் கோடை கால சிறப்பு நிதி 2 ஆயிரம் என 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதை, விமர்சிக்கும் அ.தி.மு.க.வினரும் பா.ஜ.க.வினரும் அன்றைக்கு வாய் மூடியிருந்தார்கள்.

பீகார் சட்டமன்றத் தேர்தல் தேதியை, பிரதமர் மோடியிடம் முன்கூட்டியே தேர்தல் ஆணையம் தெரிவித்துவிட்டது போல. அதனால்தான் தேர்தல் அறிவிப்புக்குச் சரியாக 10 நாட்கள் முன்பு 10 ஆயிரம் ரூபாய் திட்டத்தை அமல்படுத்தினார்கள். முதல்வரின் மகளிர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில், 75 லட்சம் பெண்களுக்கு தலா 10 ஆயிரம் வீதம் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. பெண்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

பீகாரில் 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கியவர்கள்தான், இப்போது தமிழ்நாட்டில் கலைஞர் உரிமைத் தொகையை வழங்கிவிட்டதைப் பார்த்து வாயிலும் வயிற்றிலும் அடித்து கொள்கிறார்கள்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஃப்ளாஷ்பேக்



‘தீட்டித்தோட்டம்’ ம.அருண்குமார்



## கொளத்தூரில் தேர்தல் பணி!

1985-ஆம் ஆண்டில், இளைஞர் அணி தொடக்கக் காலங்களில் சென்னை புரசைவாக்கத்தில் வீச்சாகச் செயல்பட்டவர் என் தந்தை மா.மணி. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை அழைத்து வந்து, பல இடங்களில் கொடியேற்றும் நிகழ்வை நடத்தி இருக்கிறார். அவர், உடல் நலக் குறைவால் 2013-ஆம் ஆண்டு காலமான நிலையில், கழகப் பணிக்கு நான் தயாரானேன். கழகத்தின் மீதுள்ள பற்று, என்னை சிறு வயதிலேயே கழகப் பணியாற்ற வைத்தது. 2016-ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக கழகத்தின் கோட்டையான கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில், போட்டியிட்ட நம் கழகத் தலைவர் அவர்கள், கொளத்தூர் கிழக்குப் பகுதியில், பாக முகவர் பொறுப்பில் பணியாற்ற, எனக்கு 18 வயதில் வாய்ப்பளித்தார். அப்போது, தளபதியார் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம்.

**– ‘தீட்டித்தோட்டம்’ ம.அருண்குமார்,**
**67-அ வட்ட இளைஞர் அணித் துணை-அமைப்பாளர்,**
**கொளத்தூர் கிழக்குப் பகுதி,**
**சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


102

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## லட்சியக் கனவுகளின் காலம்!

பேரறிஞர் அண்ணா, 1949-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது, கலைஞருக்கு 25 வயதும், சம்பத்துக்கு 23 வயதும், நாவலருக்கு 29 வயதும், பேராசிரியருக்கு 27 வயதுமே ஆகி இருந்தன. அந்த சமயத்தில் கட்சியில் இருந்த பெரும்பாலானவர்கள் புதிய கனவுகளையும் லட்சிய வேட்கையையும் கொண்ட இளம் தலைமுறையாகவே இருந்தனர். இந்த ஆரம்பகால வரலாற்றை அதன் சமகாலத்திலேயே ஆவணப்படுத்தியவர்களாக இருவரைக் குறிப்பிடலாம், ஒருவர் டி.எம். பார்த்தசாரதி, மற்றொருவர் நாவலர் நெடுஞ்செழியன்.

இதில் சம்பத் தி.மு.க.வை விட்டுப் பிரிந்து, புதிய கட்சி தொடங்கிய சமயத்தில், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எழுதிய நூல் ‘தி.மு.க வரலாறு’. 2021-ஆம் ஆண்டு நாவலர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, இந்த நூலை வ.உ.சி. நூலகம் மறுபதிப்பு செய்துள்ளது. சென்னை இதழியல் நிறுவனத்தின் இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள், இந்த நூலுக்கு மிக சிறப்பான ஒரு அணிந்துரையை எழுதி இருக்கிறார். பல அரிய புகைப்படங்கள் இந்நூலில் இடம்பெற்றிருப்பது கூடுதல் சிறப்பு.




1960-கள் அரசியல் ரீதியாக, தி.மு.கழகத்தின் வளர்ச்சியில் முக்கியமான காலகட்டம். அச்சமயத்தில் எழுந்த பல்வேறு விமர்சனங்களால் இதுபோன்ற ஒரு நூலை எழுத வேண்டிய தேவை உருவாகி இருக்கிறது.

> **“தி.மு.க.வின் வரலாற்றுப் போக்கைச் சரியாகப் புரிந்துகொள்ள, இந்நூல் முக்கியமான ஒன்றாகும்!”**

ஆகவே, நாவலரின் பிற்கால செயல்பாடுகளில் முரண்பாடுகள் இருந்தாலும், அவர் எழுதிய இந்த நூல் தி.மு.க.வின் குரலாக எழுதப்பட்ட வரலாறுகளில் முக்கியமான ஒன்று.

தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து, 1963 -ஆம் ஆண்டு வரை ‘திராவிட நாடு’ என்பது அதன் மூலாதாரக் கொள்கையாக இருந்துள்ளது தெளிவு. அது கழகத் தலைமையிலும் அதன் தொண்டர்களிடத்திலும், எந்த அளவுக்கு முக்கியமான ஒரு கருத்தியலாக விளங்கியதென்பது இந்நூல் மூலம் மீண்டும் நிரூபணமாகிறது.

தி.மு.க.வின் மீது சிலரால் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுள் ஒன்றான, ‘தி.மு.க.வுக்குத் தொடக்கக் காலத்தில் சரியான பொருளாதாரக் கொள்கை இல்லை’, போன்றவற்றிற்கு பதில் சொல்லும் விதத்தில், இந்நூலில் ஒரு தனி இயலே இருக்கிறது. தொழிலாளர் நலத்திலும், மக்கள் நலத்திலும் தி.மு.க. கொண்ட பார்வையை அந்த இயல் விளக்குகிறது.

கட்சிக்கும் சினிமா/நாடக கலைஞர்களும் எத்தகைய கொடுத்தல் வாங்கல் இருந்தது என்பதையும், இந்த நூல் தெளிவுபடுத்துகிறது. அந்தக் கால காங்கிரஸ் கட்சியில் தாண்டவமாடிய பணம், ஊழல் போன்றவற்றை ஒருபுறம் விமர்சிக்கவும் நாவலர் தயங்கவில்லை.

தி.மு.க.வின் வரலாற்றுப் போக்கைச் சரியாகப் புரிந்துகொள்ள, இந்நூல் முக்கியமான ஒன்றாகும், பேரறிஞர் அண்ணா அவர்களால் கையெழுத்துப் பிரதியாக எழுதப்பட்டு, 2001-இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்ட ‘எண்ணித் துணிக கருமம்’ நூலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக உள்ளதும் இந்த நூலின் சிறப்பாகும்.

**...வாசிப்போம்.**

# கருவூலம்

## தேர்தலுக்குச் செயலூக்கம்!

1991-ஆம் ஆண்டு, கழக ஆட்சி கலைக்கப்பட்டு, மீண்டும் தேர்தல் பணிகள் தொடங்கின. மார்ச் 22 - ஆம் தேதி கலைஞர் எழுதிய உடன்பிறப்பு கடிதம் ஊக்கம் அளித்தது. “நாம் இந்தத் தேர்தலில் பெறப்போகிற வெற்றி-வெறும் பதவிக்கான வெற்றியல்ல! பகுத்தறிவு அடிப்படையில் முழங்கி வரும், நமது முற்போக்கு கருத்துகளுக்கும் திட்டங்களுக்கும் செயலாக்கம் தருவதற்கான வெற்றியாகும்!” எனக் குறிப்பிட்டார்.